ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2307/21 - 2022 නොවැම්බර් මස 24 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.11.24
*2307/21 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு**

இரண்டாவது திருத்தம்

2017, ஏப்பிறல் 07 ஆந் திகதிய மற்றும் 2013/31 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட மற்றும் பின்வரும் பகுதி I இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கப்பட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பானது பின்வரும் பகுதி II இல் காட்டப்பட்டுள்ளவாறு மீளவும் திருத்தியமைக்கப்படுகிறது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்களும் நிபந்தனைகளும் மாற்றமின்றி தொடர்ந்தும் செயல்வலுப்பெறும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

**எம். ஏ. பீ. தயா செனரத்,**
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

2022, நவெம்பர் 10.

பகுதி I

திருத்த இலக்கம் 01 - 2021, திசெம்பர் மாதம் 27 ஆந் திகதிய மற்றும் 2260/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை.

1A - G 38128 — 07 (2022/11)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

பகுதி II

அட்டவணை - 06

அட்டவணை 06 இன் தொடரிலக்கம் 02 இன் கீழ் காணப்படும் குறிப்பானது பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகிறது.

குறிப்பு: பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தபட்சம் 40% புள்ளிக்குக் குறையாத புள்ளியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். சிரேஷ்ட தொழில்நுட்பவியல் பரீட்சையின் முதலாவது அரைப்பகுதியின் I ஆவது மற்றும் II ஆவது தொகுதிகள், இரண்டாவது அரைப்பகுதியின் II ஆவது தொகுதியின் (அ) பகுதி மற்றும் இரண்டாவது அரைப்பகுதியின் II ஆவது தொகுதியின் (ஆ) பகுதி ஆகிய பாடங்களில் சித்தியடைந்தவர்கள் மூன்றாவது வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்தவர்களாகக் கருதப்படுவர்.

EOG 11-258

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.